# நிவித்திகல பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஜுன் 17 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 09 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்டோபர் 14 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, நிவித்திகல பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிவித்திகல பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபைக்குச் சொந்தமான நிலையான வைப்பு முதலீட்டுப் பெறுமதி ரூபா 1,710,638 ஆகும். எனினும், வைப்புச் சான்றிதழை நேரடியாகப் பரீசீலித்தபோது அப் பெறுமதி ரூபா 500,000 ஆகக் காணப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான காணிகளதும் கட்டிடங்களதும் பெறுமதி கணக்குகளில் வெளிக்கொணரப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணம் வருவாயை இனங்கண்டு அதனைக் கணக்கிலிடவில்லை.

(ஈ) எட்டுக் கணக்கீட்டு விடயங்களது இறுதிக் கணக்குப் பெறுமதியை அவற்றிக்குரிய உப பதிவேடுகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 727,845 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 19,317,232 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,452,599 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 6,640,281 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 935 | 738 | 197 |
| (ii) | குத்தகை வாடகை | 4,182 | 3,052 | 1,130 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,077 | 214 | 863 |
| (vi) | பிற வருவாய் | 9,779 | 10,563 | - |

**2.2.2 குத்தகை வாடகை**

2012 ஜனவரி 01 இல் உள்ளவாறு 4 கடைகளது வாடகை நிலுவையாகிய ரூபா 76,286 கணக்காய்வுத் தினமான 2012 நவம்பர் 23 ஆந் திகதியளவிலும் அறவிடப்படாதிருந்தது. 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டிற்கான வாடகைப் பட்டியலும் தயாரிக்கப்படவில்லை.

**2.2.3 பிற வருவாய்**

(அ) 2011 டிசெம்பர் 30 ஆந் திகதிய 1739 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட கரவிட்ட, நிவித்திகல தேல எனும் நகரங்களில் வாடகைக்கும் வியாபார நடவடிக்கைகளுக்கும் நிறுத்திவைக்கப்படும் வாகனங்களுக்கான மாதாந்தக் குத்தகைப் பணத்தை உப விதிகளை ஏற்படுத்துவதன் மூலம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2012 பெப்ரவரி 23 ஆந் திகதிய சபைத் தீர்மானம் இலக்கம் 06 க்கமைய மாதாந்தம் நிரந்தர வாடகை அறவிடப்படும் வாகனங்களைத் தவிர, வெளியிலிருந்துவந்து நிவிக்திகல நகரில் தங்கியிருக்கம் மணித்தியாளங்களுக்கு அறவிடப்படம் கட்டணத்தின் பிரகாரம் குறைந்த தொகையான ரூபா 20,000 க்குக் கேள்விகளைக் கோரி கட்டணம் அறவிடப்படலாம் என முன்மொழியப்பட்ட போதும், உப விதிகளைத் தயாரித்து கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 2,074,666 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 5,618,576 |

**2.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான பௌதீக வளங்கள்**

(அ) நெடுங்காலமாக 53 – 5634 எனும் கெப் வண்டி பயன்படுத்தப்படாதிருந்தது. நேரடியாகப் பரீசீலிக்கப்பட்ட போது கதவுகளது கொழுவிகளும் கண்ணாடிகளும் அகற்றப்பட்டு அவை தொடர்ந்து பயன்படுத்தப்படாமையால் வாகனம் ஏலத்தில் விற்பனையாகும் போது பெறக்கூடிய பெறுமதி குறைவடைந்து செல்வதும் அவதானிக்கப்பட்டன.

(ஆ) செயலற்றிருக்கும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மக்கள் வங்கியின் 192-261065296-7 இலக்க சேமிப்புக் கணக்கின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 13,982 ஆகும்.

## 2.4 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி தலைவர் உட்பட 12 அங்கத்தவர்களுக்கு மீளாய்வாண்டின்போது ரூபா 175,000 விழா முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை குடியரசின் 2005 ஜுன் 08 ஆந் திகதிய 396/118 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் உள்ள விதிகளுக்கு முரணாக சபைக் கூட்டங்களில் பங்கு பற்றாத 8 அங்கத்தவர்களுக்கு 10 சந்தர்ப்பங்களில் ரூபா 50,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) 2010 பெப்ரவரி 29 ஆந் திகதியன்று ஒப்பந்தகாரர் ஒருவருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 200,000 முற்பணம் கணக்காய்வுத் தினமான 2012 நவம்பர் 28 வரை தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(ஆ) பழுதுபார்ப்பதற்கெனத் தனியார் கராஜ் ஒன்றிற்கு அனுப்பப்பட்ட கெப் வண்டி ஒன்று ஆண்டு 6 மாதமாகியும் பழுதுபார்க்கப்பட்டுத் திருப்பி அனுப்பி வைக்கபப்படுவதற்கான நடவடிக்கையின்றி இருந்தது.

(இ) பன்னிரண்டு செலவின விடயங்களுக்கான ரூபா 5,737,804 நிதியேற்பாடு முற்றாக எஞ்சியிருந்தது. 11 செலவின விடயங்களின் ரூபா 1,222,130 நிதியேற்பாட்டுக்கு அதிகமாக செலவு ஏற்பட்டிருந்தது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வரவு, செலவுத் திட்டம்

(இ) வருவாய் நிர்வாகம்